DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. STC. 426/2021
**Depositions of PW 3 Witness for**

| Name | சோலைப்பாண்டி | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th Day of September 2024

Signature of Witness.

**19.09.2024**

1,2 எதிரிகள் ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது சித்தமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். மதுபான கடையில் மேற்பார்வையாளராக வேலை பார்த்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 24.01.2021 ம் தேதி காலை சுமார் 07.15 மணியளவில் நானும், துணி தேய்க்கும் ராசு என்பவரும் எங்கள் ஊர் காளியம்மன் கோவில் அருகே நின்றுகொண்டிருந்தோம். அப்போது எம்.புதுப்பட்டி போலீசார் வந்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். பின்னர் சண்டை நடந்ததாக சொல்லி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ-2** ஆகும்.இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால், காவல் நிலையம் செல்லவில்லை, சம்பவ இடத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். புகார்தாரர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக வேண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.